11.06.2025

**OS. 353/ 2023 வா. சா. 1. தங்கராசு, த/பெ. முத்தடைக்கன்**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

ராமனின் வாரிசுகள் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த சொத்தினை தவிற புல எண் 480/12ல் வேறு இடம் கிடையாது என்றால் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்று சொல்லித்தான் எனக்கு விற்பனை செய்தார்கள். வா.சா.ஆ.2 பட்டா மாறுதல் உத்தரவு 2012ல் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி வா.சா. ஆ.2 ஆனது யார் மனு கொடுத்தது எந்த வட்டாட்சியரின் செயல்முறைப்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது போன்ற விவரங்கள் ஏதும் கூறிப்படவில்லை என்று சொன்னால் நான் மனு கொடுத்தன் அடிப்படையில் பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டது. மற்ற கூட்டுப்பட்டாதாரர்களின் சம்மதத்துடன் வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்டதாக குறிப்பு ஏதும் இல்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஏற்படுவதற்கு முன்பு கருப்பையா 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தை ரத்து செய்யவில்லை என்று சொன்னால் கருப்பையா என்பவர் 2ம்பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணமே எழுதிக்கொடுக்கவில்லை. ராமனின் மகன்கள் கருப்பையாவும் , மாரிமுத்துவும் 2ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணமே எழுதிக்கொடுக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் மோசடியானது என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 சட்டப்படியான மறுபயனுக்கு ஏற்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வா.சா.ஆ.1 ன் அடிப்படையில் மாவட்ட நில அபகரிப்பு தடுப்பு காவல் பிரிவில் 1,2 பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்திருந்தேன் என்றால்

ஆமாம். அந்த புகாரின் மீது என்னையும், ராமன் மகன் கருப்பையா, 1,2 பிரதிவாதிகள் ஆகியோரை அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணையில் ராமன் மகன் கருப்பையா வா.சா.ஆ.1–ன்படி மேற்படி புல எண்ணில் எனக்கு பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்று வாக்குமூலம் கொடுத்தார் என்று சொன்னால் இல்லை. வா.சா.ஆ.1 சம்பந்தமாக ராமன் மகன் கருப்பையாவை அழைத்து இந்த வழக்கில் விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தேவைப்பட்டால் விசாரிக்க தயாராக உள்ளேன். தாவா 1–ம் அயிட்ட சொத்தினை அனுபவித்து வருவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ரசீது தாக்கல் செய்துள்ளேன். கூட்டுப்பட்டாவாக இருந்தபோது வரி செலுத்தி ரசீது ஏதும் இருந்ததா என்றால் மழையின் காரணமாக வீடு நனைந்து காணாமல் போய்விட்டது. அதனால் தாக்கல் செய்யவில்லை. எந்த வருடம் காணாமல் போனது என்றால் சுமார் 20 வருடங்கள் இருக்கும். கூட்டுப்பட்டாவாக இருந்தபோதும், தற்போதும் வரி ஏதும் செலுத்தவில்லை என்றும் வழக்கிற்காக அதை காணாமல் போனதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1–வது அட்டவணை சொத்திற்கு தாக்கல் செய்துள்ள கணினிச் சிட்டா வா.சா.ஆ. 5 முதல் வா.சா.ஆ. 13 வரையிலான ஆவணங்கள் 2011–ம் ஆண்டு மோசடியாக ஏற்படுத்திய ஆவணங்களின் அடிப்படையில் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.16 வரை ஆவணங்கள் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, 2, 5 முதல் 16 வரை ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்க ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணமானது புல எண் 480/12–ல் எங்கள் குடும்பத்திற்கு சொத்து உள்ளது என்பதைக் காட்டுவதற்கான ஆவணம் என்று சொன்னால் சரிதான். புல எண் 480/12 சொத்தில் எங்கள் குடும்பத்திற்கு 20 ஏர்ஸ் இடம் இருப்பதாகவும் அது ஒரே சேகரமாக இருப்பதாகவும்

கட்சி செய்கிறேன் என்றால் இரண்டு அணைகளாக ஒரே சேகரமாக அனுபவம் செய்து வருகிறேன். புல எண் 480/12–ல் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 10 ஏர்ஸ் இடத்தினைப் பொறுத்து 05.07.2008–ல் ஆவண எண் 211/2008–ன் படி நானும், எனது தாயார் மாரிக்கண்ணுவும் 2–ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளோம் என்றால் எங்கள் குடும்பத்திற்கு 20 ஏர்ஸ் பாத்தியப்பட்டது. அதில் 10 ஏர்ஸை மட்டும் 2–ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்தோம். நாங்கள் எழுதிக்கொடுத்த அதே தேதியில் கூட்டுப்பட்டாவில் கண்ட ஆறுமுகம் மகன் முத்துக்கருப்பனின் மனைவி சரஸ்வதி முத்துக்கருப்பனுக்கு பாத்தியமான 10 ஏர்ஸ் கொண்ட இடத்தினை ஆவண எண் 212/2008–ன்படி 2–ம் பிரதிவாதிக்கு பதிவு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். நாங்கள் எழுதிக் கொடுத்த ஆவணத்தில் நானும், என் தாயார் மாரிக்கண்ணுவும் 2–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் "எங்களில் 1–வது நபரின் கணவரும், 2–வது நபரின் தகப்பனாரும் ஆன மரக்கா (எ) முத்தடைக்கன் பெயரில் பட்டா ஏற்பட்டு அவரும் ஆண்டு அனுபவித்து வந்ததும் அவர் காலமான பிறகு வாரிசுரிமைப்படி நாங்கள் சொத்தை அடைந்து நாளது தேதி வரை அனுபவித்து வருகிற இதனடியில் கண்ட புஞ்சை நிலத்தை" என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறுதான் அதில் காணப்படுகிறது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
திருமயம்.